அன்றன்றுள்ள அப்பம் வழங்கும்

# ஒலிவமரக் கன்றுகள்

மே-2023 | மரம்-2 | கன்று-5 | ஆண்டு சந்தா ரூ.250/- | தனிப்பிரதி ரூ.25/- | ஆயுள் சந்தா ரூ.2500/-



நீதிமான் தன் உத்தமத்திலே நடக்கிறான்;
அவனுக்குப் பிறகு அவன் பிள்ளைகளும்
பாக்கியவான்களாயிருப்பார்கள்.

*நீதிமொழிகள் 20:7*

ஆசிரியர். J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை

# சிறுபிள்ளைகளே, கிறிஸ்து உங்களில் உருவாகும் வரைக்கும்... (கலாத்தியர் 4:19)

அன்பிற்குரியவர்களே, உங்கள் அனைவருக்கும் இயேசப்பாவின் நாமத்தில் வாழ்த்துக்கள். பள்ளி/கல்லூரித் தேர்வுகளை நல்ல முறையில் எழுதியிருப்பீர்கள் என்று நம்புகிறேன். அடுத்து வரும் மேற்கல்விக்கான காலங்கள் மிகவும் முக்கியமானவை என்பதால் காலங்களை வீணாக்காமல் வாழ்வை திட்டமிடுங்கள்.

ஒலிவமரக் கன்றுகள் இதழ் சிறியவர்களுக்கான சிறப்பு படைப்பாக இருந்த போதிலும் வயதில் மூப்படைந்த பாட்டி தாத்தாமார்களும் இவ்விதழை படிக்கிறீர்கள் என்பதை உங்கள் கடிதங்கள் சொல்கிறது. இவ்விதழை வாசிப்பவர்கள் உங்கள் பேரக்குழந்தைகளோடு பகிருங்கள். வாழ்க்கையும் செம்மையாகும். நேரமும் கனியுள்ளதாகும்.

மைக்கேல் ஆஞ்சலோ கையிலிருக்கும் உளிக்கும், கல்லுடைக்கும் மாடசாமி கையிலிருக்கும் உளிக்கும், மாறுபாடுகள், வேறுபாடுகள், நிலைப்பாடுகள் உண்டு.

உன்னைச் செதுக்குகிற உளிகள் என்பது தன்னைச் செதுக்குகின்ற வழிகள் என்பதும் ஒன்றுதான். இங்கே நம்மை நாம் செதுக்கிக்கொள்ள ''ஒலிவமரக் கன்றுகள்'' உங்கள் வாழ்வோடு பயணம் செய்யும் திசைகாட்டி மட்டுமே.

சுரங்களைக் கூட்டக் கூட்டத்தான் இசையும் உன்னதமாகிறது; வார்த்தைகளைக் கூட்டக் கூட்டத்தான் கவிதையும் உன்னதமாகிறது; ஆனால், ஒரே ஒரு கலை மட்டும்தான் கழிக்கக் கழிக்க உன்னதமாகிறது; அது உளியால் செதுக்கப்படுகிற சிற்பம் மாத்திரம்தான், ''ஒலிவமரக் கன்றுகள்'' கிறிஸ்துவைப் போன்று உங்களை செதுக்கிக்கொள்ளவும் பயணத்திற்கான பாதைகளைத் தீர்மானிக்கவும் கற்றலோடு நிற்க அதற்குத் தக.

நான் சிலையை செதுக்கவில்லை. மாறாக பாறாங்கல்லில் இருந்த சில துகள்களை வெட்டி அகற்றினேன், அது சிற்பமாகிவிட்டது' இது சிற்பி ஆஞ்சலோவின் கூற்று.

அப்படித்தான் மனிதனும்! தன்னிடமிருக்கிற கசடுகளை-கபடுகளை-கழிக்கக் கழிக்கத்தான் உன்னதமான மனிதனாக மாற முடியும் என்கிற மகத்தான தத்துவத்தையே, செதுக்கும் உளிகள் செய்கின்றன.

நீங்களும் கிறிஸ்துவைப் போல மிளிரும்போது, இத்தகைய உணர்வுகளை உண்மையான வாழ்க்கையை முன்னெடுக்க... ''ஒலிவமரக் கன்று''களின் உளிகளும் உங்களைச் செதுக்கி செம்மையாக்கி மிளிரச் செய்ய ஜெபத்துடன் உங்கள் கைகளில் சமர்ப்பிக்கிறேன். கிறிஸ்துவைப் போல உருமாறுவதற்கான முடிவு உங்கள் கைகளில். உங்களுக்காக ஜெபிக்கிறேன்.

அன்புடனும், அக்கறையுடனும்:

*அங்கிள்.* **J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை**



# மர் மரம்



இஸ்ரவேல் நாட்டில் மலை தேசமான மோரியாவின் மலையடிவாரங்களில் கனிதரும் காட்டு பழமரங்களை ஏராளமாய் காணலாம். அதில் உண்ணுவதற்கு ஏதுவல்லாத பழங்களை தரும் ஒரு மரத்துக்கு ''மர்'' (Myrrh Tree) என்று பெயர் வந்ததற்கு மோரியா என்ற வேர்ச்சொல் காரணமாக இருக்கலாம். மர் மரத்தை சிலர் வெள்ளைப் போல மரம் என்றும் அழைப்பதுண்டு. மஞ்சள்நிறப் பூக்களோடும், திராட்சைப் பழ வடிவில் அதன் சிறிய காய்களைக் கொண்ட உயரம் குறைவான மர் மரத்தின் அதிகபட்ச உயரமே 12 அடியைத் தாண்டாது. மர் மரத்தின் கிளைகளும் அவ்வளவு பெரிதாக இருக்காது. இலைகளும் அவ்வளவு அடர்த்தியாக காணப்படாது. இதன் காரணமாக புதர்த் தாவரமான மர் மரத்தை குறுமரம் (Shrub) என்றும் கருத இடமுண்டு.

இஸ்ரவேல் நாட்டினர் வழக்கமாக கொண்டாடும் கூடாரப் பண்டிகைக்கு தேவையான பழங்களைத் தேடி மலைக்கு வருவது வழக்கம். ஆனால், மர் மரத்தின் பக்கம் மட்டும் பழங்களைப் பறிக்க முயற்சிக்க மாட்டார்கள். மனிதர்கள்தான் இப்படி என்றால் பறவையினங்களும் ஒன்று கூட அதன் கிளைகளில் வந்து அமர்வதையோ, கிளைகளில் கூடு கட்டுவதையோ காண இயலாது. காரணம், நம்மூர் வேப்பங்காய் போல அதன் பூ, இலை, கனி, மரப்பட்டை, வேர் என்று உச்சிக் கிளையிலிருந்து அடி வேர் வரை பரவியிருக்கும் கசப்புச் சுவை (Bitterness) தான் அதற்கு முதன்மைக் காரணம்.

உலகில் எத்தனையோ படைப்புகள் இருக்கின்றன. ஆனால் மர் மரத்திற்கு மட்டும் இப்படி ஒரு கசப்பை கொண்டிருக்கும் வகையில் மரத்தை உண்டாக்கிய அடிப்படை காரணமென்ன? கசப்போடு படைக்கப்பட்டது தேவனுடைய தவறா? இந்தக் கசப்புத்



தன்மையை அனுமதித்த காரணம் என்ன? கசப்பை மரத்திலிருந்து எடுத்துவிட தேவனால் இயலாதா? என்றெல்லாம் கூட நானும் எண்ணியிருக்கிறேன். ஆனால், படைப்பின் நிறைவில் தேவன் அவைகளை பார்த்து ''நல்லதென்று'' கண்டார் என்ற சொல்லைக் கண்டு தேவன் படைப்பதெல்லாம் நன்மைக்குத்தான் என எனக்குள் நானே சமாதானம் சொல்லி என் மனதை நானே அமைதிப்படுத்தியிருக்கிறேன்.



மர் மரத்தில் காணப்படும் வியப்பான விடயம் என்னவென்றால் மரம் முளைத்தெழும்பி ஓரிரு ஆண்டுகளில் அதன் கிளைகளிலிருக்கும் மரப்பட்டைகள் வெடிக்க ஆரம்பிக்கும். அந்த வெடிப்புக்குள்ளிருந்து மர் மரம் அதன் கசப்பான (Tears) பிசின் போன்ற திரவம் மரம் முழுவதும் வழிந்தோட ஆரம்பிக்கும். பிசின் வழிந்தோடுவது நின்றபின் மரத்தைச் சுற்றிலும் வீசும் வெப்பக் காற்றால் பிசின் காய்ந்து அதிலிருந்து சாம்பிராணி போல உலகம் அதுவரை கண்டிராத வாசனையை வெளிப்படுத்த ஆரம்பிக்கும்.



வாசனை எங்கிருந்து வருகிறது என்று அந்த வாசனையை நுகர்ந்தவர்கள் அத்தனை பேரையும் அது தன்பால் சுண்டி இழுக்கும் வகையில் அவ்வளவு இதமான வாசனையை வெளிப்படுத்துமாம். இவ்வாசனையை நுகர ஆரம்பித்த மோரியா மக்கள் மலையடிவாரங்களை நோக்கி மர் மரம் எங்கு இருக்கிறது என திரள்திரளாக பிசினை வெட்டி சேகரிக்க கூடைகளுடனும் சிறு சிறு கத்திகளுடனும் இந்த மரம் எனக்கு அந்த மரம் உனக்கு என போட்டி போட்டிக் கொண்டு முற்றுகையிட ஆரம்பிப்பர். இப்போது மக்கள் தேடி வந்தது பழங்களுக்காக அல்ல. மாறாக எந்த மரத்திடமும் காணப்படாத தரையெல்லாம் சிந்தியிருந்த நறுமண திரவியமான பிசினுக்காகத்தான். அந்த மர் மரத்தின் கசப்பு எழும்பப் பண்ணின வாசனை அவ்வளவாய் அவர்களை ஈர்த்தது. அந்தக் கசப்பான மர் மரத்தின் கண்ணீருக்கு (பிசினுக்கு) வேதம் ஒரு பெயர் கொடுத்திருக்கிறது, அது தான் ''வெள்ளைப்போளம்'' என்பது.

வெள்ளைப் போளத்தைக் குறித்து வேதாகமம் யாத்திராகமம் 30:23-25ல் ஆசரிப்புக் கூடார பரிசுத்த அபிஷேக தைலத்துக்கு தேவையான ஐந்து மூலப்பொருள்களில் தேவனால் குறிக்கப்பட்ட முதற்பொருள் வெள்ளைப்போளம் தான். மனிதர்கள் வெறுத்துத் தள்ளும் கசப்புத் தன்மை, தேவனின் பார்வையில் ஏற்புடையதாக இருக்கிறது. ஆம், தேவனின் பார்வை மனிதனின் பார்வையை விட வேறுபட்டது. அவர் வழி தனி வழி என்பது இதுதானோ!

உலகமே விரும்பப்படத் தக்க ஒன்றாய் மாறிவிட்ட மர் மரத்தின் வெள்ளைப்போளத்தை வணிகர்கள் இன்றும் Myrrh Tears வெள்ளைப்போள கண்ணீர் என்றே அழைக்கிறார்கள். இஸ்ரவேலர்களைப் பொருத்தவரையில் இது அதிக விலைக்கு விலைபோகும் பணப்பயிர். வெள்ளைப் போளத்திற்கு காரணமான மர் மரத்தின் கண்ணீரை ''திரவத்தங்கம்'' என்றும் யூதர்கள் அழைக்கிறார்கள்.

### பழைய ஏற்பாட்டில் வெள்ளைப்போளம்:

''மர்'' என்ற பெயரில் இருந்துதான் கசப்பு என்ற பொருளைத் தரும் ''மாரா'' என்ற சொல் பிறந்தது. மாராவிலே இஸ்ரவேல் ஜனங்கள் குடிக்கக் கூடாதபடி தண்ணீர் கசப்பாயிருந்தது.

அப்போது கர்த்தர் மோசேக்கு ஒரு மரத்தைக் காண்பித்தார். அதை தண்ணீரில் போட்டபோது அது இனிமையானதாக மாறிற்று. அந்த மரம் இந்த மர் மரம் தான் என்பது மேலான வேதபண்டிதர்கள் ஏற்றுக்கொண்ட ஒன்று. மர் மரம் ஒரு கசப்பான மரம் ஆயிற்றே, அதைப் போட்டால் எப்படி தண்ணீரின் கசப்பு நீங்கும் என்று நினையாமல் மோசே கர்த்தருக்கு கீழ்படிந்தான். மர் மரத்தின் கசப்பைக் கொண்டே கர்த்தர் மாராவின் கசப்பை மதுரமாக மாற்றினார். உங்கள் கசப்பான அநுபவங்களையே நினைத்துக் கொண்டிராமல் கர்த்தருக்கு கீழ்ப்படிந்திருங்கள். உங்களைக் கொண்டு அநேகருடைய கசப்பான வாழ்க்கையை கர்த்தர் மாற்ற திட்டம் பண்ணியிருக்கிறார். உங்கள் வாழ்வின் கசப்பான அனுபவங்களுக்குள் அநேகருடைய வாழ்வின் கசப்பை மாற்றும் வல்லமையைக் கர்த்தர் வைத்திருக்கிறார்.

### புதிய ஏற்பாட்டில் வெள்ளைப்போளம்:

கிறிஸ்து சிலுவையில் மரிப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன் அவருடைய சிரசின் மீது வெள்ளைக்கல் பரணியில் இருந்த வெள்ளைப்போளத்தை ஊற்றினாள். அவள் வாழ்க்கையின் கசப்பு (Bitterness) என்ன என்று தெரியவில்லை. ஆனால் அதை Betterness ஆக கர்த்தர் மாற்றினார். சுவிசேஷம் அறிவிக்கப்படும் இடங்களில் எல்லாம் அவளைக் குறித்தும் அறிவிக்கப்படுகிறதே. இதுதான் அவளுடைய Betterness (மத்தேயு 26:13).



இயேசு பிறந்தபோது வெள்ளைப்போளம் காணிக்கையாக கொடுக்கப்பட்டது (மத்தேயு 2:11). இயேசு சிலுவையில் பாடுகளை அனுபவித்த போது திராட்சரசத்தின் காடியில் வெள்ளைபோளம் கலந்து கொடுக்கப்பட்டது (மாற்கு:15:23, மத்தேயு 27:34). இயேசு மரித்து அடக்கம் பண்ணும் போதும் அவர் சரீரத்தில் வெள்ளைப்போளம் பூசினார் நிக்கோதேமு (யோவான் 19:39,40) கிறிஸ்துவின் பிறப்பு, பாடு - மரணம், மற்றும் உயிர்த்தெழுதல். இவை மூன்றிலுமே வெள்ளைபோளம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

### நான் தான் மர் மரம் பேசுகிறேன்:

அன்புக் குழந்தைகளே! என்னைப்போல உங்கள் வாழ்க்கையில் உள்ள சில குறைவுகள், அல்லது நீங்கள் சந்தித்த கசப்பான நிகழ்வுகள் உங்கள் வாழ்க்கையை சலிப்பாக்கி இருக்கிறதா? கசப்பான காரியங்களைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தவிக்கிறீர்களோ? கலங்க வேண்டாம். நிச்சயமாய் தாயின் வயிற்றில் நீங்கள் உருவாகுமுன்பே உங்களை பெயர் சொல்லி அழைத்த தேவன் உங்கள் குறைவுகளை நிறைவாக, கண்ணீரை ஆனந்தக் களிப்பாக மாற்ற தேவனால் இயலும். Bitterness into Betterness.

வயது முதிர்ந்த அன்னாளின் குழந்தையின்மை அவளுக்கு Bitterness.

ஆனால் அன்னாளுடைய சாமுவேல் என்கிற பிள்ளை தேவன் தந்த Betterness.

திருமணமாகி குறுகிய காலத்தில் கணவனை இழந்தது ரூத்தின் Bitterness.

ஆனால் போவாஸ் கிடைத்தது ரூத்தின் Betterness.

என்னைக் கைவிட்டீரோ என்பது இயேசுவின் Bitterness.

ஆனால் சிலுவையோ கிறிஸ்துவின் Betterness.

அன்புக் குழந்தைகளே, உங்கள் வாழ்க்கையிலும் ஒரு Bitterness இருக்குமென்றால் நிச்சயமாய் ஒரு Betterness காலம் உங்களுக்கு உண்டு. உன் நம்பிக்கை வீண் போகாது.

வெள்ளைப்போளத்துக்கு ஒரு சிறப்பு உண்டு. அது எதன் மீதெல்லாம் படுகிறதோ அவை எல்லாவற்றயும் இனிமையானதாக மாற்றிவிடும்.

உங்களைகொண்டு லட்சங்களுடைய வாழ்க்கையை கர்த்தர் இனிமையானதாக மாற்ற விரும்புவதால் தான் உங்கள் வாழ்க்கையில் சில கசப்புகளை அனுமதித்திருக்கிறார்.

என்னுடைய குறை எப்போது தீரும்? நானும் மற்றவர்களைப் போல் ஆசீர்வதிக்கப்படுவது எப்போது? என்னுடைய ஏக்கங்களுக்கெல்லாம் ஒரு முடிவில்லையா? எனக்கு ஒரு அற்புதத்தைச் செய்ய மாட்டீரா என ஏங்குகிறீர்களா? உங்கள் Bitterness எல்லாம் Betterness ஆக மாறும். உங்களுக்கு கொடுத்த வாக்குத்தத்தை நிறைவேற்றியே தீருவார். கலங்க வேண்டாம். பொறுத்திருங்கள்.

தன்னை நோக்கி கூப்பிடுகிற காக்கைக் குஞ்சுகளுக்கும் பதில் கொடுக்கிற இரக்கமுள்ள தேவன் கொடுக்கும் பதில் இதுதான்,

''காத்திரு'' என்பதே அது.

---

## உயிர்த்தெழுந்த ஆண்டவரை கண்ட பெண்கள் சாட்சி பகர சீடர்களின் இல்லத்திற்கு விரைந்து செல்ல வழிகாட்டி உதவுங்கள்.



# என் கேள்விக்கென்ன பதில் Q&A

**இயேசுவின் உயிர்ப்பு உண்மைதானா? அந்த நிகழ்வுக்கு வரலாற்று சான்றுகள் ஏதேனும் உள்ளதா? - மரியா, திருநின்றவூர்.**

இயேசுவின் உயிர்த்திருக்க வாய்ப்பே இல்லை என "The Lost Tomb of Jesus" எனும் தனது டாக்குமெண்டரியில் சிம்கா ஜாக்கோபோவிசி என்பவர் தெரிவித்திருக்கிறார்.

தன்னுடைய ஆவணப் படத்தில் அவர் இயேசுவின் கல்லறையைக் கண்டதாகவும் அதில் ''யேசேப்பின் மகனாகிய இயேசு'' என எழுதப்பட்டிருந்ததாகவும், அது எருசலேமிற்கு அருகில் இருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

அது மட்டுமன்றி இயேசுவின் டி.என்.ஏ கூட தனக்குத் தெரியும் எனவும் அவர் தெரிவித்திருக்கிறார். இஸ்ரேல் ஆய்வாளர்கள் இதை முழுமையாக மறுதலிக்க, சிலர் உண்மையாய் இருக்கக் கூடும் என விவாதிக்கின்றனர்.

இயேசு என்பதும் யோசேப்பு என்பதும் தெருவுக்குப் பத்து எனுமளவுக்கு அக்காலத்தில் மிக மிக அதிகம் புழங்கியவை என ஒரு சாரார் ஆதாரங்களோடு வாதிட, யோசேப்பின் மகனான இயேசு என்பது இயேசுவைக் குறிக்கலாம் என சிலர் வாதிடுகின்றனர்.

எப்படியோ, இயேசுவின் டி.என்.ஏ வை நிரூபிக்க அவர்கள் விண்ணகம் சென்று இயேசுவிடம் விண்ணப்பிக்க வேண்டி வரலாம்.

அதெல்லாம் ஒரு புறம் இருக்கட்டும். இத்தகைய ஆராய்ச்சிகள் எதை வலியுறுத்துகின்றன?

''உயிர்த்தவரை ஏன் இறந்தவர்களிடையே தேடுகிறீர்கள்?'' என்றார் உயிர்த்த இயேசு. ஆனால் இன்றைய ஆராய்ச்சியாளர்கள் தினம் ஒரு தகவலை அள்ளி விட்டுக் கொண்டே இருக்கின்றனர்.

இவர்கள் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சிகள் ஒவ்வொன்றும் காலப்போக்கில் இல்லை என்றாகிக் கொண்டே வருவதே இத்தகைய ஆராய்ச்சிகள் எத்தனை வலிமையானவை என்பதன் சான்றுகள். உதாரணம் ஆதாமின் பல்!

இயேசு உயிர்த்துவிட்டார் என்பது கிறிஸ்தவத்தின் அடிப்படை.

இயேசு உயிர்த்துவிட்டார் என்பதற்கு அவருடைய அப்போஸ்தலர்களின் வாழ்க்கையை விட ஆழமான ஆதாரம் நமக்குத் தேவையில்லை.



இயேசு இறந்தவுடன் பயந்து போய் அறைகளின் தாழிட்டுக் கொண்ட சீடர்கள், இயேசு உயிர்க்காமல் இருந்திருந்தால் தங்கள் பழைய தொழிலுக்கே திரும்பிப் போயிருப்பார்கள்.

உண்மையைச் சொல்லப்போனால், அவர்களில் சிலர் மீன் பிடிக்கவும் சென்று விட்டனர். இயேசு அவர்களுக்கும் காட்சி கொடுத்தார். அதன் பின்னர் தான் அவர்கள் இறை பணிக்குத் திரும்பினார்கள்!!!

இயேசுவின் சீடர்களின் வாழ்க்கையைப் பார்த்தால் அதைப் போன்ற கோரமான, கொடூரமான, மரணத்தை வரலாற்றில் யாரும் பெற்றிருக்க வாய்ப்பே இல்லை என்பது புலனாகும்.

ஒரு உதாரணம், ஒருவர் உயிரோடு தோல் உரிக்கப்பட்டு, சிலுவையில் தலைகீழாய் அறையப்பட்டு கொல்லப்பட்டார்.

இயேசுவின் அப்போஸ்தலர்கள் அனைவருக்குமே அந்தந்த காலகட்டத்தைச் சேர்ந்த எதிரிகள் ஒரு கடைசி வாய்ப்பை வழங்கினர். இயேசுவை மறுதலித்துவிட்டு உயிர் பிழைத்துப் போ! என்பதே அது. அதை அனைவரும் நிராகரித்தனர். இயேசுவின் உயிர்ப்பின் அனுபவம் கிடைக்காமல் இருந்திருந்தால் ஏன் அவர்கள் இயேசுவை மறுதலிக்க மறுக்க வேண்டும்? இத்தனைக்கும் இயேசு பிடிபட்டபோது பின்னங்கால் பிடறியில் பட ஓடியவர்கள் அவர்கள்!!!

இயேசுவின் அப்போஸ்தலர் பணியில் தேர்வு செய்யும் ஊழியர்கள் இயேசுவின் உயிர்ப்பைப் பார்த்தவர்களாகவே இருப்பதை பல இடங்களில் காண முடிகிறது. சுமார் இரண்டாயிரம் பேர் இயேசு உயிர்த்ததைப் பார்த்ததாக விவிலிய அறிஞர்கள் கூறுகின்றனர்.

இயேசுவின் வாழ்க்கை மனுக்குலத்தின் மீது அழுத்தமாய் எழுதப்பட்ட ஒரு காவியம் போல, அதன் ஒவ்வோர் பக்கத்திலும் வாழ்வின் பாதைகள் புனிதத்துவமாய் செதுக்கப்பட்டுள்ளன.

கேட்க வேண்டுமென இயேசு யாரையும் கட்டாயப்படுத்தவில்லை. அவர் சொன்னார்: கேட்கச் செவி உள்ளவன் கேட்கட்டும்!




கிறிஸ்துவின் பணியில் ஆதரவு கரம் நீட்ட விரும்பினால் காசோலை (Cheque) அல்லது வரைவோலை / கேட்புக் காசோலை (D.D.) கீழ்க்கண்ட பெயரில் எடுத்து, எங்களது அலுவலக முகவரிக்கு பதிவஞ்சல் (Register Post) / தூதஞ்சலில் (Courier) அனுப்புங்கள். கூடுதல் தகவலுக்கு:

✆ **9003067777**

| | | |
|---|---|---|
| ACCOUNT NAME | : | **ANTANTULLA APPAM TRUST** |
| ACCOUNT NO. | : | 048 201 000 010 247 |
| BANK NAME | : | **INDIAN OVERSEAS BANK** |
| IFSC CODE | : | IOBA0000482 |
| SWIFT CODE | : | IOBAINBB001 |
| BRANCH & CODE | : | MAHALINGAPURAM BRANCH & 482 CHENNAI - 600 034. |

G Pay **98406 95296**

தொடர்கதை-9

# அவர் வழி எப்பவும் தனி வழி தான்..

இயேசு தன்னுடைய நம்பிக்கைக்குரிய பதினொன்று சீடர்களையும் பார்த்தார்.

நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் (யோவான் 13:34). உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். (யோவான் 14:1,2).

நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்; இதுமுதல் நீங்கள் அவரை அறிந்தும் அவரைக் கண்டும் இருக்கிறீர்கள் (யோவான் 14:6,7).

ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்குப் போதும் என்று தேவனை பார்க்கும் ஆவலில் சீடர்கள் கேட்டார்கள் (யோவான் 14:8).

இயேசு சற்று நேரம் மௌனமாய் இருந்தார். பின் அவர்களிடம் ‘இத்தனை நான் உங்களோடு இருந்தேன் இன்னும் நான் யார் என்பதை நீங்கள் அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவையே கண்டான். நானே அவர். நான் உங்களிடம் பேசியவை எவையும் நான் பேசியவை அல்ல, என் பிதா பேசியவையே. ‘இயேசு சொல்ல சீடர்கள் புருவம் உயர்த்தினார்கள். பரலோக பிதாவும் தானும் ஒன்று என்னும் ரகசியத்தை இயேசு மரிக்கப் போகும் நேரத்தில் வெளியிடும் காரணம் புரியாமல் தடுமாறினார்கள். முதலிலேயே சொல்லியிருந்தால் இயேசுவைக் கடவுளாகப் பார்த்தால் இணைந்து பணியாற்றியிருக்க முடியுமா என்னும் கேள்வியும் அவர்களைச் சுற்றியது.

‘நீங்கள் என் பெயரால் எதைக் கேட்டாலும் நான் அதை உங்களுக்குத் தருவேன். நீங்கள் என்னை அன்பு செய்தால் என் கட்டளைகளைக் கடைபிடியுங்கள். நான் பிதாவிடம்



கேட்பேன். அவர் பரிசுத்த ஆவியானவரை உங்களுக்கு அனுப்புவார். அவர் உங்களுக்கு தைரியமும் வழிகாட்டுதலும் தருவார்' இயேசு தொடர்ந்து சொன்னார்.

'உங்களிடையே அமைதியை விட்டுச் செல்கிறேன். இந்த அமைதியை நீங்கள் உலகுக்கு வழங்குங்கள். நீங்கள் என்னிலும் என் வார்த்தைகளிலும் நிலைத்திருங்கள்.' இயேசு தொடர்ந்து சற்று நேரம் சீடர்களுக்கு ஆறுதலும், போதனைகளும், வழிகாட்டுதல்களும் வழங்கினார்.

'வாருங்கள் போவோம். நேரம் நெருங்கிவிட்டது' இயேசு திடீரென்று எழுந்தார். சீடர்களும் எழுந்தார்கள்.

இயேசு கெத்சமெனே தோட்டத்தை நோக்கி நடக்கத் துவங்கினார். சீடர்கள் பின் தொடர்ந்தார்கள்.

அன்னாவின் முன்னிலையில் காய்பா இயேசுவைப் பிடிக்க அனுமதிக்காய் உரையாடிக்கொண்டிருந்த நேரத்தில் யூதாஸ் உள்ளே வந்தான்.

அன்னாவையும் காய்பாவையும் யூதாஸ் பணிந்து வணங்கினான்.

'உன் பெயரென்னப்பா?' அன்னா கேட்டார்.

'யூதாஸ் காரியோத். சீமோனின் மகன்'

'ஊர்?'

'காரியோத்'

'நீ எத்தனை காலமாக இயேசுவின் நண்பனாக இருக்கிறாய்?'

'சுமார் மூன்று ஆண்டுகளாக'

'காரியோத்தில் பிறந்த ஒரு நல்ல மனிதன் நீ. நீ எப்படி ஒரு கலிலேயனான இயேசுவுடன் நட்பு வைத்தாய்?' அன்னா கேட்டார்.

'நான் இயேசுவை நம்புகிறேன்'

'எதை நம்புகிறாய்?'

'இயேசு சொல்லும், செய்யும் எல்லாவற்றையும் நம்புகிறேன்' யூதாஸ் சொன்னான். அன்னாவின் கண்களில் கோபத்தின் மின்னலடித்தது.

'அப்படியென்றால் எதற்கு இயேசுவைக் காட்டிக் கொடுக்கத் துணிந்தாய்?'

'நான் இயேசுவைக் காட்டிக் கொடுப்பது ஒருவேளை அவருடைய நன்மைக்காகக் கூட இருக்கலாம். அவருக்கு பொது இடங்களில் எதிர்ப்புகளும் வருகின்றன. அவர் அதிலிருந்து தப்பவேண்டுமென்றால் அரச காவலில் இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அவரை நீங்கள் எதுவும் செய்யமாட்டீர்கள், காயப்படுத்த மாட்டீர்கள் என்றால் தான் அவரைக் காட்டித் தருவேன்' யூதாஸ் சொன்னான்.

'யூதேய ஆளுநர்களின் நேர்மை இரக்கம் குறித்து சந்தேகப்படுகிறாயா?' அன்னா குரலுயர்த்தினார்.

'இல்லை.. நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை. இயேசு ஒரு நல்ல மனிதர். அதனால் தான்...' யூதாஸ் இழுத்தான்.

'நீ இயேசுவுடன் சேர்ந்து கலகத்தில் ஈடுபட்டாய் என்பதற்காக உன்னையும் கைது செய்யும் உரிமை எனக்கு இருக்கிறது. சில நாட்களுக்கு முன்பு தான் ரோம அரசுக்கு எதிராக ஆட்களைக் கூட்டி கலகத்தில் ஈடுபட்டிருந்த பரபாஸைப் பிடித்து சிறையில் அடைத்திருக்கிறோம்.. தெரியுமா?' காய்பா அதிகாரத் தோரணையைக் காட்டினான்.

‘சரி.. நீ.. இயேசுவுடன் என்ன செய்து கொண்டிருந்தாய்?’

‘நான் அந்த கூட்டத்தின் பொருளாளராக இருந்தேன். கணக்கு வழக்குகளைப் பார்ப்பது தான் என் பணி’.

‘ஓ.. நல்ல பணப் புழக்கமா?’

‘இல்லை வெகு கொஞ்சமாகத் தான். இயேசு உண்பதிலும் தங்குவதிலும் அதிக ஈடுபாடு காட்டுவதில்லை. ஏதேனும் உண்பார். ஏதாவது மலைகளில் படுத்துறங்குவார். அவருக்கு பணம் தேவைப்பட்டதில்லை.’

‘இயேசு கூட்டத்தினரிடையே வன்முறையைத் தூண்டி விடுகிறானாமே’ அன்னா மீண்டும் கேட்டார்.

‘ஐயோ.. அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. அவர் ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தையும் கூட காட்டுமளவுக்கு அமைதியானவர். சில வேளைகளில் கோபமடைந்து விடுகிறார். ஆலயத்தில் நடந்த நிகழ்ச்சி அப்படி நடந்த ஒரு அபூர்வ நிகழ்ச்சி.’

‘அவர் எங்களைக் குறிவைத்து எதிர் பிரசாரங்கள் செய்வதும், கூட்டம் சேர்த்துக் கொண்டு ஓசான்னா பாடி பவனி வருவதுமெல்லாம் குற்றம் என்பதை நீங்கள் யாரும் அவருக்குச் சொல்வதில்லையா?’ அன்னா கேட்டார்.

‘அவர் சரியெனப் படுவதைச் செய்வார்.’ யூதாஸ் அமைதியானான்.

‘சரி.. ஏன் இப்போது இயேசுவுக்கு எதிராக செயல்படுகிறாய்? இதில் ஏதும் சதி இல்லையே? இயேசுவுடன் சேர்ந்துவிட்டு நீ ஏதும் தனியாக திட்டம் வைக்கவில்லையே? அப்படி நடந்தால் அதன் தண்டனை என்னவென்று தெரியுமா?’ அன்னா எச்சரித்தான்.

‘இல்லை.. இல்லவே இல்லை. இதில் எந்த சதியும் இல்லை. என்னை நீங்கள் முழுதாய் நம்பலாம்’ யூதாஸ் படபடத்தான்.

‘இரவாக இருக்கிறது. எனவே நீ அவரைத் தொட்டு இவர் தான் இயேசு என்று அடையாளம் காட்டவேண்டும். நாங்கள் அவரைப் பிடித்துக் கொள்வோம்’ அவர் சொல்ல யூதாஸ் உள்ளுக்குள் சிரித்தான். இயேசுவைப் பிடிக்கப் போகிறீர்களா? மடையர்களே எத்தனை முறை நீங்கள் அவரைக் கொல்லப் பார்த்தீர்கள். அவர் உங்கள் கைகளுக்கு அகப்படாமல் மறைந்து போனது தெரியாதா? நான் காட்டிக் கொடுத்தாலும் நீங்கள் அவரைப் பிடிக்கும் முன் அவர் உங்களிடமிருந்து தப்பி விடுவார்.

‘இதோ... முப்பது வெள்ளிக்காசுகள். இது உனக்கான ஊதியம். நீ ஆள்பவர்களுக்கு ஆதரவாக இருப்பதால் தரப்படுகிற பரிசு’ அன்னா சொல்ல, யூதாஸ் ஆர்வத்துடன் அந்த சுருக்குப் பையை கைகளில் ஏந்தினான். உள்ளே முப்பது வெள்ளிக்காசுகள் அவனுடைய கனவுகளுக்கு சிறகுகள் செய்து கொண்டிருந்தன.

‘தொட்டு என்ன? அவரை நான் கட்டிப் பிடித்து முத்தமிடுகிறேன். நீங்கள் அவர் தான் இயேசு என்று அறிந்து கொள்ளுங்கள்’ யூதாஸ் சொன்னான். சும்மா இவர் தான் இயேசு என்று சொல்வதற்கே எனக்கு முப்பது வெள்ளிக் காசுகளா ! அவனுடைய மனம் குதூகலித்தது.

‘சரி. இன்று இரவு எருசலேம் நகர் தூங்கியபின் நீ அவரை எங்கள் படைவீரருக்கு அடையாளம் காட்டு. அவர் இருக்குமிடத்துக்கு அவர்களைக் கூட்டிப் போ.’ சொல்லிக்கொண்டே அன்னா இருக்கையில் அமர்ந்தான்.

யூதாஸ் சிரித்தான். ‘வாருங்கள்... போவோம்...’

தொடரும்...

சுய முன்னேற்றப் பகுதி

# உஷாரய்யா உஷாரு...

பாவம் என்பது நமது பாதங்களுக்குக் கீழே, நாமே விரும்பி வைத்துக் கொள்கிற கண்ணிவெடி. பாவத்தை விடவும் முடியாமல், தொடரவும் முடியாமல் இருதலைக் கொள்ளி எறும்பாக மாறி ''காலை எடுத்தால் கண்ணி வெடித்து சிதறிவிடும்'' எனும் நிலமைக்குத் தள்ளப்படுவோம்.

எப்படி ஒரு மனிதன் போதைக்கு அடிமையாகிறானோ, அப்படியே மெதுவாகக் கொல்லும் விஷம் போல, ஒருவனை பாவம் கபளீகரம் செய்து விடுகிறது. விட நினைத்தால் துரத்தும், தொடர நினைத்தால் அழிக்கும் என பாவம் நம்மை அலைக்கழிக்கும். பாவத்தைப் பிடித்தவன், புலி வாலைப் பிடித்துக் கொண்டவனின் நிலமைக்கு தள்ளப்படுவான். புலியின் வாலை விட்டால் புலி அவனைத் தின்று விடும். விடாவிட்டால், இவனால் எதுவும் செய்ய முடியாது.

பாவம் என்பதன் விஸ்வரூபத்தை யாரும் முதலில் புரிந்து கொள்வதில்லை. அதை ஒரு சுவாரஸ்ய அனுபவமாகவோ, ஒரு தேடலாகவோ, ஒரு திரில்லாகவோ துவங்குகிறார்கள். அது பின்னர் புற்று நோய்போல பரவி, அவர்களுடைய வாழ்க்கையையே அழித்து விடுகிறது. ''வாளை எடுப்போர் அனைவரும் வாளால் அழிந்து போவர்'' என்றார் இயேசு. பாவம் அழித்து விடும் என்பதன் எச்சரிக்கை தொனியாகவும் அதை எடுத்துக் கொள்ளலாம்.

எகிப்தியர்கள் பாம்பையும், அறிவற்ற விலங்குகளையும் வழிபட்டனர். எனவே அவர்களுடைய அழிவும் பயனற்ற விலங்குகள் மூலமாக வந்தது. நாம் செய்கின்ற செயலே நமக்கு எதிராகத் திரும்பி விடுகிறது. தேவன் நினைத்தால் எகிப்தியர்களை எப்படி வேண்டுமானாலும் அழித்திருக்கலாம், ஆனால் அவர்களுடைய பாவத்தின் அடையாளங்களைக் கொண்டே அவர்களை நிர்மூலமாக்கியது கவனிக்கத்தக்கது.



பாவம் என்பது தற்காலிக இன்பங்களுக்காக நிரந்தர வரங்களை மறுதலிப்பது போன்றது. சிற்றின்பச் சாரலுக்காக, பேரின்ப நதியை புறக்கணிப்பது போன்றது. பாவம் என்பது படுகுழியில் இறங்கிச் செல்லும் பாதை. அங்கே சிகரங்களைச் சந்திப்பது இயலாத காரியம்.

பாவம் செய்து நரகத்திற்கு போவதை விட இடறல் உண்டாக்கும் கண்ணை பிடிங்கிப் போட்டு ஒரு கண்ணுடையவனாய் பரலோகம் போவது மேலானது என சொன்ன இயேசுவின் வார்த்தைகள் பாவத்தின் வீரியத்தை நமக்கு விளக்குகின்றன.

பாவம் என்பது புதைகுழியின் மேனி, சுயமுயற்சியால் வெளியேறவே முடியாது. பாவம் எனும் கண்ணிவெடியிலிருந்து மீள வேண்டுமெனில், மீட்பு எனும் சிலுவையை நோக்கிப் பார்க்க வேண்டும்.

# விடுகதைகள்

1. மோப்ப சக்தியில் முதலிடம். வீடும் தெருவுமே இருப்பிடம். வீட்டையும் நாட்டையும் காக்கும். வாலாட்டிப் பாசம் காட்டும் அது எது?
2. அலகு வெட்டும் வாள்; சிறகு விரிக்கும் குடை; கால்கள் இளஞ்சிவப்பு; கண்கள் கோலிக் குண்டுகள். நான் யார்?
3. கழுத்தில் பிடரி புரளும். நின்று கொண்டே தூங்கும். பாரம் தூக்கிச் செல்லும். பந்தயத்தில் வெல்லும். வேதாகமத்தில் பல இடங்களில் பங்கேற்பு உண்டு. அது எது?
4. தும்பிக்கையில்லா யானைப் போன்ற பெருங்காடுகளில் வசிக்கும் வலிமைமிக்க மிருகம். வாயோ பெரிய பானை. வேதாகமத்தில் இதன் பெயர் என்ன?
5. ஓட்டிலே கூடு கட்டும். ஓயாது இரைந்தலையும். கூட்டிலே முட்டையிட்டு குஞ்சுகள் பொரித்து வாழும். இவைகளைக் காட்டிலும் நாம் விசேஷித்தவர்கள். அது என்ன?
6. காட்டுக்குள்ளே ஒரு கருப்பன் கனமான உடலைத் தூக்கி ஆட்டம் போட்டு ஓடிடுவான். ஊசாய் அப்சலோமிடம் இந்த மூன்றெழுத்து மிருகம்போல் என எதைப் பற்றி உரைத்தது?
7. நாயைப் போன்றிருப்பான், ஊளையிடுவான், நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு நாற்றிசையும் பாய்ந்தோடுவான். அவைகளின் வாலிலே தீப்பந்தம் கட்டின வல்லவன் யார்?
8. பளிங்குபோல் கண்களிரண்டு. பார்க்க அழகு காதுகளிரண்டு. தெளிந்த கவர்ச்சி முகத்திலுண்டு. தொங்கும் நல்ல மீசைகள் உண்டு. வேதாகமத்தில் இரண்டு இடங்களில் ‘என்னை உண்ண வேண்டாம்’ எனக் கூறுகிறது. நான் யார்?
9. நீண்ட கால்களுடையவன். மொடாக் குடியன். புயல், மழையென்று அசையாமல் அவனிருப்பான். தகிக்கும் தனலிலும் பயணிப்பான். அவன் யார்?
10. பார்வோனை வாட்டி எடுத்த இது நீரையும் விரும்பும், நிலத்தையும் இது விரும்பும். தாவித் தாவிப் போகும். தங்கக் குரலும் உண்டு. அதன் குரலே அதன் உயிருக்கு உலை. அது என்ன?





விடைகள்:

1. நாய் (1சாமு 17:43)
2. நாரை (ஏசாயா 34:11)
3. குதிரை (1இராஜா 4:26)
4. காண்டா மிருகம் (எண் 23:22)
5. அடைக்கலாங்குருவி (சங் 84:3)
6. கரடி (2சாமு 17:8)
7. சிம்சோன் (நீதி 15:4)
8. முயல் (லேவி 11:6)
9. ஒட்டகம் (ஆதி 24:10-65)
10. தவளை (யாத் 8:1-15)

# கேட்டாரே ஒரு கேள்வி

சீடத்துவ பாடம்: 12

இயேசுவின் வருகை மனுக்குலத்தின் மீது ஒரு மனிதன் கொள்ள வேண்டிய அன்பை எடுத்துக் காட்டுகிறது. சாதாரண, எளிய குடும்பத்தில் பிறந்த இயேசு சமூக அவலங்களையும், ஏற்றத்தாழ்வுகளையும், போலித்தனங்களையும், மதச் சடங்குகளையும் கடுமையாய் எதிர்த்தவர். அதற்காகவே படுகொலை செய்யப்பட்டவர். அவரை நம்புவோர் மீட்படைவார்கள் என்பது கிறிஸ்தவப் பாடம். அவரைப் பின்பற்றுவோர் மனிதநேயத்தை கொண்டிருக்கவேண்டும் என்பது வாழ்வியல் பாடம். எப்போதும் பிறரோடு அன்பும் நல்லுறவும் கொண்ட வாழ்க்கை வாழ முடிவெடுப்போம்.

**இயேசுவின் வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சி**

பரிசேயர்கள் வழக்கம் போல இயேசுவை அவரது செயல்களை விமர்சித்துக் கொண்டிருந்தார்கள். பேய்பிடித்திருந்த நபரிடமிருந்து இயேசு பேயை ஓட்டியபோது 'பேய்களின் தலைவனைக் கொண்டு பேயோட்டுகிறான்' என்றனர். இயேசு அவர்களுடைய சிந்தனைகளை ஊடுருவிப் பார்க்கிறார். அவர்களுடைய இதயம் வெறுப்பினால் நிரம்பியிருந்தது, அவர்களுடைய உள்ளம் கர்வத்தினால் களவாடப்பட்டிருந்தது. அவர் அவர்களைப் பார்த்துக் கேட்டார்:

''விரியன் பாம்புக் குட்டிகளே, தீயோர்களாகிய நீங்கள் எவ்வாறு நல்லதை பேச முடியும்?

விரியன் பாம்புக் குட்டிகள் எப்போதுமே விரியன் பாம்புக் குட்டிகளாகத் தான் இருக்கும். அவை மண்புழுக்களாய் மாறி மண்ணுக்கு வளம் சேர்ப்பதில்லை. மாறாக விஷப் பற்களோடு அலைந்து மனிதரைக் காயப்படுத்திக் கொன்றுவிடும்.

இயேசு பாம்பை உதாரணமாய் எடுக்கிறார். பாம்பு, ஏதேனின் தோட்டத்தில் ஏவாளை வசீகர வார்த்தைகளால் ஏமாற்றியது. அதன் இயல்பு அது. விஷ வார்த்தைகளை அது அமிர்தமாய்த் தூவி ஏவாளை ஏமாற்றி தேவனோடான புனித உறவை உடைத்தது! வார்த்தைகள் கவனமாய் பயன்படுத்தப்பட வேண்டியவை.

ஒருவன் தீயவனாக இருந்தால் அவனிடமிருந்து நல்ல வார்த்தைகள் வருவதில்லை. இதயம் முழுவதும் குப்பையைச் சேகரித்து விட்டு, வாயில் நறுமணம் கமழ வேண்டுமென நினைத்தால் முடியாது. அப்படியே செயற்கைத் தனமாய் வாசனை பூசிக் கொண்டாலும் அது சற்று நேரத்தில் பல்லிளித்துவிடும். நறுமணம் வேண்டுமெனில் நாம் செய்ய வேண்டியது வாசனையைப் பூசிக் கொள்வதல்ல, குப்பையை அகற்றி விடுவது.

மாமரம் எப்போதுமே மாங்கனியைத் தான் கொடுக்கும். அதில் என்றைக்குமே பலாப் பழத்தை நாம் பறிக்க முடியாது. அப்படியே பலாப்பழத்தை மாமரத்தில் ஒட்டி வைத்தாலும் அது நிலைக்காது. சிறிது நாட்களிலேயே காய்ந்து போய் அதன் உண்மைத் தன்மை வெளியே தெரியும். மரம் தனது இயல்பை வளப்படுத்திக் கொண்டால் மட்டுமே, கனிகள் சிறப்பாக இருக்க முடியும்.

கிராமத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள், 'சட்டியில இருக்கிறது தான் அகப்பைல வரும்'! ஒரு மனிதன் தனது உள்ளத்தில் இருப்பதைத் தான் பேச முடியும். சமூகத்தில் நிலவுகின்ற கொடுமைக்கு எதிராகப் பேசுகிறவன் உண்மையிலேயே சமூக அக்கறை உடையவனாக இருப்பான். மத உணர்வுகளைத் தூண்டும்படி பேசிக்கொண்டே இருப்பவனின் உள்ளம் சுயநலத்தினால் நிரம்பியிருக்கும். சாதீய வன்மத்தினால்

பேசுபவனின் இதயம் வெறுப்பினால் கறைபடிந்துக் கிடக்கும். ஒருவனுடைய பேச்சு அவனுடைய அடையாள அட்டை.

இன்றைக்கு வாட்சப் குழுக்களில் நிலவுகின்ற உரையாடல்கள் பலருடைய உள்ளத்தை டிஜிடல் திரையில் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. உள்ளம் அமைதியாய், அன்பாய் இருந்தால் வார்த்தைகளும் அன்பாய், அழகாய் இருக்கும். அதற்கு நாம் செய்ய வேண்டியது அழகிய வார்த்தைகளைத் தேடுவதல்ல, அழகிய இதயத்தை நாடுவது.

‘நமது இதயம் இனிப்பான பானம் நிறைந்த பாத்திரமாய் இருந்தால், அதிலிருந்து சிந்துபவை எல்லாமே இனிப்பானவையாய் தான் இருக்கும்’ என்றார் ஏமிகார்மைக்கேல்.

நல்ல ஊற்றிலிருந்து உப்புத் தண்ணீர் சுரக்காது, நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்காது, நல்ல இதயம் தவறான வார்த்தைகளை வீசாது. வார்த்தைகள் வாளைப் போல, வீசிவிட்டால் காயம் தரும். அதன் பின் எத்தனை மன்னிப்பைக் கேட்டாலும் வடுக்கள் மறைவதே இல்லை ! எனவே கவனம் தேவை.


இயேசு, நமது இதயங்களை சரிசெய்யச் சொல்கிறார். நமது வார்த்தைகள் நம்மைத் தீர்ப்பிடும். தீர்ப்பு நாளில் நாம் குற்றவாளிகளா, இல்லையா என்பதை நாம் பேசிய வார்த்தைகளே முடிவு செய்யும். காரணம், நமது இதயம் அன்பில்லாமல் இருந்தால் வாய் அன்பற்ற வார்த்தைகளையே பேசும். அன்பற்ற மனிதர்கள் அன்பான செயல்களைச் செய்ய முடியாது. வார்த்தைகள் நமது செயல்களின் பிரதிநிதிகள்.

நாம் எதை உண்கிறோம் என்பது பிரச்சினையில்லை, ஆனால் உள்ளிருந்து வருகின்ற வார்த்தைகளைக் கவனிக்க வேண்டும். உடலை வலுவாக்க உணவுகளைத் தேர்ந்தெடுத்து சாப்பிடுவதைப் போல, வார்த்தைகளையும் தேர்ந்தெடுக்க வேண்டும். இதயம் முழுவதும் நல்லவை நிரம்பியிருந்தால் அதிலிருந்து எதை எடுத்தாலும் நல்லதாகவே இருக்கும்.

நமது வார்த்தைகள் நாம் யார் என்பதை அடையாளப்படுத்துகின்றன. நமது வார்த்தைகள் நமது இதயத்தின் நிலமையை வெளிப்படுத்துகின்றன. நமது வார்த்தைகள் நியாயத் தீர்ப்பு நாளில் நம்மைத் தீர்ப்பிடுகின்றன. வார்த்தைகளை அன்பில் வார்த்தெடுப்போம்.

நம்மை உலுக்குகிற இயேசுவின் கேள்விக்கு ஐயன் திருவள்ளுவரின் பதிலும் கனியிருப்பக் காய் கவர்ந்தற்று என்பதே.

உலக சரித்திரத்திலேயே
முதன்முறையாக
ஒரு குற்றவாளிக்காக
நீதிபதியே இறங்கி வந்து
வக்கீலாக மாறி
பரிந்து பேசி
அபராதமாக
தன் உயிரையே கொடுத்து
குற்றவாளியை மீட்ட
உன்னத சம்பவம்
நடந்தேறிய இடம்தான்
**சிலுவை...**



# அவ்வளவு இளக்காரமா?

கடவுள் விலங்குகளையும் மனிதனையும் ஒரே நாளில் படைத்தார்! என்று சொன்னால் சிலர் சட்டென வேதாகமத்தைப் புரட்டிப் பார்க்கக் கூடும். அது தான் உண்மை. விலங்குகளைப் படைத்தபின், அதே நாளில் கடவுள் மனிதனைப் படைத்தார். ''கடல் மீன்களையும், வானத்துப் பறவைகளையும், கால்நடைகளையும், மண்ணுலகு முழுவதையும், நிலத்தில் ஊர்வன யாவற்றையும் ஆளட்டும்'' என்பதே கடவுள் மனிதனுக்கு இட்ட முதல் பணி!

மிருகமும், மனிதனும் ஒரே நாளில் படைக்கப்பட்டதால் தானோ என்னவோ மனிதனுக்குள் இயல்பாகவே மிருக குணம் பதுங்கி இருக்கிறது. ஆனால் மனிதன் தேவ சாயலாக இருந்தான் என்பதும், இறைவனின் சுவாசத்தால் உயிர் பெற்றான் என்பதும் மட்டுமே மனிதனை விலங்கிடமிருந்து வித்தியாசப்படுத்திக் காட்டியது.

குணாதிசயம் - அது மனதில் நிரம்பியிருந்தால் வெளிவருவதும் நேசமாகவே இருக்கும்.

இனிமையான பானம் இருக்கும் கோப்பையை அசைத்தால் அதிலிருந்து கொட்டுவதும் இனிமையான பானமாகவே இருக்கும். அதே போல மனதில் இனியவற்றை மட்டுமே நிறைப்போம். அப்போது தளும்புவதும் இனிமையானவையாகவே இருக்கும் எனும் ஏமி கார்மைக்கேல் வார்த்தைகளை மனதில் கொள்வோம்.

'ஞானிகளை வெட்கப்படுத்துபடி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளை தெரிந்து கொண்டார் என்று!'

அழகான வரையாடுகளை அவர் தெரிந்து கொள்ளாமல், அதாவது முட்டாள் கழுதைகளை தெரிந்து கொண்டு அதன் மீது பவனி சென்றார். அதன் நோக்கமே சமூகத்தால் எவர் எல்லாம் தள்ளி வைக்கப் பட்டிருந்தனரோ, எவரின் கால்கள் எல்லாம் கட்டி வைக்கபட்டு (கழுதையைபோல்) விடுதலையை அனுபவிக்க முடியாமல் அடிமைகளாகவே வாழ்ந்து கொண்டிருந்தனரோ அவர்களுக்காக இயேசு இந்த பூமிக்கு வந்தார்.



ஆடு மாடு கூட ஒப்பிடும்போது கழுதையை மக்கள் படும் கேவலமாக பார்த்தாங்க பார்த்தீங்களா? அதனால தான் இயேசு அதை தெரிந்து கொண்டார். தலைவர் எப்பவுமே அப்படிதான் எது/ எவர் எல்லாம் அற்பமாக

எண்ணப்படுகின்றனரோ அதை / அவர்களை எல்லாம் தேடி வருவார். தலைவர் கேரெக்டரே வேற தான். ச்சீ என்று மனிதன் புறம் தள்ளும் எல்லாமே அவர் கண்ணுக்கு அழகு தான்.

இயேசு கழுதை மேய்த்ததாக வேதாகமத்தில் எங்குமே குறிப்பிடப்படவில்லை. கிறிஸ்தவ பெயரை வைத்துக்கொண்டு எலிசபெத் ஏன் இப்படி சொன்னார்? இயேசுவின் தந்தை தச்சராக இருந்ததனால் இயேசுவும் அத்தொழிலையே செய்திருக்க வாய்ப்புண்டு. தனது 12-வது வயதிலிருந்து 30-வது வயதுவரை பெற்றோருடன் இயல்பான வாழ்க்கை வாழ்ந்ததாகவே உள்ளது. குழந்தையாக இருந்தபோது ஏரோதிடமிருந்து தப்பிக்க குடும்பமே எகிப்திற்கு கழுதையிலே தப்பியதாக உள்ளது. இயேசு சிலுவையில் மரிப்பதற்கு முன் குருத்தோலை ஞாயிறு அன்று கழுதையின் மேல் அமர்ந்து எருசலேமிற்குள் வந்ததாக உள்ளது. மற்றபடி கழுதை மேய்த்ததாக எங்கும் இல்லை.

அங்கு நம்மூர் மாடு, எருமை எல்லாம் கிடையாது. அங்கு ஆடு, கழுதை தான் உண்டு. ஒட்டகம், குதிரை கூட அரிது, அது அராபிய மிருக வகை.

ஆடுகள் வைத்திருப்பவர் பணக்காரர்.

அவர் ஜெருசலேம் வந்தபோது கழுதை மேல சவாரி செய்து வந்தார். Palm sunday.

ஆனால் அது அந்த நாட்டுக்கு இயல்பானது. பெரிய மரியாதை எல்லாம் இல்லை. அபிகாயில் கழுதை மேல் ஏறிக்கொண்டு தான் தாவீதை கல்யாணம் பண்ணிக்க போனாள்.

இதில் ஆஆவென்று வாயைபிளந்து பார்க்க எதுவுமில்லை.

கழுதை பென்ஸ் காருமில்லை. குதிரை தான் பென்ஸ் கார். குதிரை இல்லாத ஊருக்கு கழுதை குதிரை.

இயேசு தான் பயணம் செய்வதற்கு கழுதையைப் பயன்படுத்தினார். அதன் பெயர் கோவேறு கழுதை. கோ=அரசன். அரசர்கள் பயணம் செய்யும் கழுதை...

கழுதை என்றால் கேவலமா?

அந்த காலத்தில் குதிரைக்கு நிகராக கழுதைக்கு மதிப்பும், மரியாதையும் இருந்தது மற்றும் ஆடு, மாடு, குதிரை, கழுதை, நாய் போன்றவைகளெல்லாம் எளிதில் பழக்குவதற்கும், மக்களுக்கு உதவுவதற்கும் பயன்பட்டன. நாளடைவில் கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆகிவிட்டதே ஒழிய கழுதையும் சிறந்த பிராணிதானே?

மற்றொன்று. கிறிஸ்து பிறப்பிற்கு முன்னரே கிளியோபட்ரா கழுதைப்பாலில் குளித்த கதையொன்று இன்னும் உலகத்தில் சுழன்று மயங்கிக்கொண்டிருப்பதை பார்த்தாலே தெரியவில்லையா? அந்தக்காலத்தில் கழுதைக்கு எவ்வளவு மரியாதையும், மவுசும் என்று?

ஊரறிந்த, உலகறிந்த ஒரு ராணி கழுதைப்பாலில் குளித்ததால்தான் பெருமை சேர்ந்தது. எனவே கழுதையை போல் ஒரு சிறந்தது இல்லை.

மற்றொன்று.. இன்றளவும் சபரிமலையில் மேலே பொருள்கள் கொண்டு செல்வதற்கு திடகாத்திரமாகவும், நம்பிக்கையாகவும் கழுதைகளை தான் பயன்படுத்துகின்றார்கள். கழுதைப்பாதை என்றொரு பாதையே உண்டு.

எனவே மற்ற பிராணிகளை விட கழுதை மட்டுமே கர்த்தர் உடனும், கடவுள் சேவையிலும், ராணியின் அழகிலும் புகழிலும் பங்கெடுத்துள்ளது.

அதனால் இனிமேல் யாரும் கழுதைன்னு சொன்னா கோவிக்கக்கூடாது. புரிஞ்சுதா?

**தாழ்மையை கற்றுக்கொள்ளும் செயல்முறை வகுப்பில் இயேசுவும் சீடர்களும்**

**இரண்டு படங்களுக்குமிடையே உள்ள 6 வேறுபாடுகளை கண்டுபிடிக்கவும்.**





விடைகள்: 1. துணியின் நிறம், 2. செருப்பு, 3. விளக்குகள், 4. திராட்சை, 5. கற்சாடி, 6. மேஜையின் நிறம்


# தம்பி உடையான் படைக்கு அஞ்சான்

''தம்பி உடையான் படைக்கு அஞ்சான்'' என்பது தமிழர்கள் நாம் அனைவருக்கும் மிகவும் பழக்கமான கூற்று. இது சகோதரப் பிணைப்பைப் பாராட்டுவதாகும். சமுதாயத்தை அன்போடு பிணைத்துக் காப்பது சகோதர பாசமே. ஆனாப் பாருங்க, இன்னைக்கு நேற்று இல்ல, ஆதி காலத்திலிருந்து அண்ணன், தம்பி சண்டை இருக்கத்தானே செய்யுது. ஆதி மனிதனான ஆதாமுடைய குடும்பத்தில சகோதரர்களுக்கு இடையே நடந்த ஒரு நிகழ்வைப் பார்ப்போம்.

தேவன், மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று என்று நினைத்து அவனுக்கு ஆழ்ந்த உறக்கம் வரச்செய்து, ஆதாம் விலாவிலிருந்து எலும்பு ஒன்றை எடுத்து ஒரு பெண்ணை உருவாக்கி மனிதனிடம் அழைத்து வந்தார். அதனாலதான் பெண்களை விட ஆண்களுக்கு ஒரு விலா எலும்பு குறைவாக இருக்கும்.

ஆதாம் தன் மனைவிக்கு 'ஏவாள்' என்று பெயரிட்டான். 'ஏவாள்' என்றால் உயிருள்ளோர் எல்லோருக்கும் அவளே தாய் என்று பொருள்.

ஏதேன் தோட்டத்தில எல்லாவசதி இருந்தும், கடவுளுக்குக் கீழ்ப்படியாது, மனைவி ஏவாள் கேட்டுக்கொண்டதற்காக, ஆதாம் பாம்பு வடிவத்திலிருந்த சாத்தானின் சொல்லைக் கேட்க, கோபமானார் தேவன். அதனால, இனிமேல் மனிதன் கடினமாக உழைத்துத்தான் வாழ வேண்டும் என்று சொல்லி இரண்டுபேரையும் ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றி விட்டார். அப்போது கடவுள் ''மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டதால் அதற்குத் திரும்பும் வரை நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து உன் உணவை உண்பாய். நீ மண்ணாய் இருக்கிறாய்; மண்ணுக்கே திரும்புவாய்'' என்றார்.



ஆதாம் தன் மனைவி ஏவாளுடன் கூடி வாழ்ந்தான். அப்போது ஏவாள் காயீன் என்ற மகனைப் பெற்றெடுத்தாள். 'காயீன்' என்றால் மனிதனால் உருவாக்கப்பட்டவன் என்று பொருள்.

காயீனுக்கு ஆபேல் என்ற சகோதரன் பிறந்தான். தம்பி ஆபேல் ஆடு மேய்ப்பவன். நல்ல குணத்தையும் தேவ பக்தியையும் கொண்டவன்.

காயீன் நிலத்தைப் பண்படுத்துபவன் காய் கனிகள் பயிரிடுபவன்.

சில நாள்கள் சென்றன. காயீன் நிலத்தின் பலனிலிருந்து கர்த்தருக்கு காணிக்கை கொண்டு வந்தான். கடமைக்காக வாடிய காய் கனிகளைக் கர்த்தருக்கு காணிக்கையாகக் கொண்டு வந்ததாலும், அவனுடைய மனது செருக்குற்று இருந்ததாலும், கடவுள் காணிக்கையை ஏற்கவில்லை. வெளி வேஷத்திற்காக நாம என்னதான் கடவுளுக்குச் செய்தாலும், கடவுள் பார்ப்பது நம்முடைய உண்மையான உள் மனதையும், நல்ல எண்ணத்தையும் தான் என்பது உண்மையாயிற்று.

ஆனால், கபடமற்ற நல்ல உள்ளம் கொண்ட, ஆபேல் தன் மந்தையிலிருந்து கொழுத்த தலையீற்றுக் கன்றுகளைக் கொண்டு வந்தான். கர்த்தர் ஆபேலையும் அவன் காணிக்கையையும் கனிவுடன் கண்ணோக்கினார்.

அதைப் பார்த்த, காயீன் கடுங்கோபமுற்றான். அவன் முகம் வாடியது. இதை உணர்ந்த தேவன் காயீனிடம், ''நீ ஏன் கோபமாயிருக்கிறாய்? உன் முகம் வாடி இருப்பது ஏன்? நீ நல்லது செய்தால் உயர்வடைவாய் அல்லவா? நீ நல்லது செய்யாவிட்டால், பாவம் உன்மேல் வேட்கை கொண்டு உன் வாயிலில் படுத்திருக்கும். நீ அதை அடங்கி ஆளவேண்டும்'' என்றார்.

தேவனுடைய வார்த்தையைக் கேட்காத காயீன், தன் சகோதரன் ஆபேலிடம், ''நாம் வயல்வெளிக்குப் போவோம்'' என்றான். அவர்கள் வெளியில் இருந்தபொழுது, சகோதர பாசத்தை மறந்தவனாக, வெறுப்பின் காரணத்தினால் காயீன் தன் சகோதரன் ஆபேலின் மேல் பாய்ந்து தாக்கி அவனைக் கொன்றான்.

தன் தவறை மறைத்து, ஒன்றுமே தெரியாதவன் போல காயீன் நடந்து வந்தான். கர்த்தர் காயீனிடம், ''உன் சகோதரன் ஆபேல் எங்கே?'' என்று கேட்டார். அதற்கு அவன், ''எனக்குத் தெரியாது. நான் என்ன, என் சகோதரனுக்குக் காவலாளியோ?'' என்று தேவனைப் பார்த்துக் கேட்டான்.

அதற்கு கர்த்தர், ''நீ என்ன செய்துவிட்டாய்! உன் சகோதரனின் இரத்தத்தின் குரல் மண்ணிலிருந்து என்னை நோக்கிக் கதறிக் கொண்டிருக்கிறது, நீ சபிக்கப்பட்டிருக்கின்றாய். நீ மண்ணில் பயிரிடும் பொழுது அது இனிமேல் உனக்குப் பலன் தராது. மண்ணுலகில் நீ நாடோடியாக அலைந்து திரிவாய்'' என்றார்.

எவன் ஒருவன் தன் சகோதரனை வெறுத்து ஒதுக்கிவிட்டு ''நான் தேவனை அன்பு செய்கிறேன், நான் தேவனுக்கு அன்பானவன்'' என்று பறை சாற்றுகிறானோ அவன் பொய் சொல்கிறான் என்று பொருள். கண்ணால் காணக்கூடிய சகோதரனை அன்பு செய்ய முடியாதவன் எவனும் மனித பார்வைக்கு அப்பாற்பட்ட தேவனை அன்பு செய்ய முடியாது.

கூடிவாழ்ந்தால் கோடி நன்மை என்பதை அறிந்தவர்கள் நாம். சகோதர பாசம் என்பது கூடப்பிறந்த அண்ணன் தம்பி, அக்கா தங்கை என்று மட்டும் பொருளல்ல, நண்பனை, சக மனிதனை அன்போடு அரவணைத்துச் செல்லவேண்டும் என்பதும் அதன் பொருளே.

நான் எப்போதும் என் சகோதரனுக்குக் காவலாளியே என்ற அன்பு நிறைந்த உணர்வோடு வாழ்வோம்.

# எரிக் லிட்டில்



எரிக் லிட்டில் ஒரு புகழ்பெற்ற விளையாட்டு வீரர். ஒலிம்பிக் விளையாட்டுகளில் 100 மீட்டர் தடகளப்போட்டியில் ஓடும் தகுதியை பெற்றிருந்தார். ஆயினும் இறுதி சுற்றிற்கு தகுதி பெற செய்யும் அரையிறுதி சுற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்பதை அறிந்தவுடன், தான் அந்த ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொள்ள போவதில்லை என்று தன் மேலாளரிடம் கூறினார். கர்த்தருடைய நாளை கனவீன்ப்படுத்துவது கர்த்தரையே கனவீனப்படுத்துவதற்கு ஒப்பானது என அவர் எண்ணினார்.

இதினிமதித்தம் விமர்சனங்கள் அவர் மேல் மலை போல குவிந்தன. தனது நாட்டின் புகழை கெடுத்தவர், குறுகிய மனப்பான்மையுடையவர், மத வெறி பிடித்தவர், பிறரது மகிழ்ச்சியை கெடுத்தவர் என பலவாறு அவதூறுகளை அவர் மேல் சாற்றினர். என்றாலும் தனது முடிவை அவர் மாற்றி கொள்ளவில்லை. பின்பு 220 மீட்டர் ஓட்டப்பந்தயத்தின் அனைத்து சுற்றுகளும் வார நாட்களில் குறிக்கப்பபடடிருப்பதை கண்டு, அதில் கலந்து கொள்ள அனுமதி கோரினார்.

முதல் சுற்று, இரண்டாவது சுற்று, என அனைத்திலும் வெற்றி பெற்றார். இறுதி சுற்று நாளும் வந்தது. ஓடுவதற்கென்று தனது இடத்தை நோக்கி சென்றபோது, யாரோ ஒருவர் ஒரு சிறு துண்டுத்தாளை அவருடைய கரத்தில் திணித்தார். அதை பிரித்து பார்த்தபோது,



‘என்னை கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்’ என அதில் எழுதியிருந்தது. 100 மீட்டர் ஓடவே பழகிய அவருக்கு, 220 மீட்டர் ஓடுவது சற்று கடினம் தான் என்றாலும், தேவன் அவரோடிருந்து அவரை வெற்றி பெற செய்தார். வெற்றி பெற்றது மட்டுமன்றி புதிய உலக சாதனையையும் நிகழ்த்தினார்.



‘‘ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்.’’ சங்கீதம் 91:15-ம் வசனம் எத்தனை உண்மை பாருங்கள்.

இவை எல்லாவற்றிற்கும் முக்கிய காரணம் எரிக் லிட்டில் தமது வாழ்வில் தேவனை கனப்படுதியதே.

ஆம், தானியேலும் அவன் நண்பர்களும் தேவனுடைய வார்த்தையை விட்டு கொடுக்காமல் வைராக்கியமாய் வாழ்ந்ததால் பாபிலோனிய நாட்டின் அரசின் மேன்மையான பதவியை அடைந்தனர். தேவனுக்கு முன்பாக பாவம் செய்ய துணியாது தனது தூய வாழ்வால் தேவனை கனப்படுத்தின யோசேப்பு பஞ்சத்தின்போது, தனது மக்களுக்கும் பாதுகாவலனாக உயர்த்தப்பட்டார். தேவனுக்கு உண்மையுள்ளவனாக மோசே வாழ்ந்ததால் இஸ்ரவேல் மக்களை வழி நடத்தும் தலைவனாகி தேவனால் கனப்படுத்தப்பட்டார். தேவனை கனப்படுத்தி வாழ்ந்த அநேகரின் வாழ்க்கை ஆசீர்வதிக்கபட்டிருப்பதை வேதம் நமக்கு தெளிவாய் காண்பிக்கின்றது. நாமும் எல்லா சூழ்நிலையிலும் தேவனை கனப்படுத்துவோம். வாழ்வில் உயர்வோம். கர்த்தர் தாமே ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

என்னை கனப்படுத்துகிறவனை நானும் கனப்படுத்துவேன். 1 சாமு 2:30.

---

# கற்றவையும் பெற்றவையும்




நவ நாகரீக உலகில், எட்டாக் கனியென புனிதம் கருதி பதுமையாய் வைக்கப்பட்டுள்ள இறை வார்த்தை நிகழ்வுகளை, யதார்த்த வார்த்தைகளில், எளிய நடையில், கதையின் வடிவில் சாதாரண மனிதரும் சாமானியத்தில் புரிந்து கொள்ளும் வகையில் இதழை வடிவமைத்திருப்பது பாராட்டப்பட வேண்டிய அம்சமாகும். இதழின் எழுத்துக்கள் படிக்கும் எவரையும் வயது வேறுபாடின்றி வசீகரிக்கிறது. இதழின் எழுத்துக்கள் அவர்களது இதயங்களை கொள்ளையடிக்கும் சக்தியுள்ளதை நான் அறிவேன்.

அருட்திரு. மதன் மோகன், ECI திருச்சபை, திருப்பூர்

இதழை தற்செயலாக நண்பரின் வீட்டில் கண்டு வாசிக்க நேர்ந்தது. அழகான தமிழ் நடை, சுண்டியிழுக்கும் தலைப்பு, வேதாகமத்திலுள்ள மனிதர்களைப் பற்றிய குறிப்புகள், கதைகளின் ஊடாக வரும் திருப்பங்கள், தரமான தமிழ், படிக்கப் படிக்க வேதாகம உலகிற்கு சிறுவர்களை கைப்பிடித்து அழைத்துச் செல்லும் போக்கு, காணப்படும் அரிய குறிப்புகள், வேதாகமத்தின் மூல வரலாறோடு முரண்பட்டு விடாத, உண்மைகளை உலகறிய பறைசாற்றும் இதழ் ஒலிவமரக் கன்றுகள். வாழ்த்துக்கள்.


ஆலிவர் வேதமுத்து, வெள்ளியம்பலம்

# பொன்மொழிகள்

ஒரு கிறிஸ்தவனின் பெலன் அவனது உடல் வலுவையோ, மனபெலத்தையோ, பண திரட்சியையோ சார்ந்ததல்ல, தேவனோடு அவனுக்குள்ள உறவு எத்தனை ஆழமானது என்பதைப் பொறுத்ததே. - A.W. டோசர்



மெய்யாகவே கிறிஸ்தவர்கள் வேதாகமத்தில் சொல்லப்பட்ட இயேசு கிறிஸ்துவின் போதனைக்கு ஏற்ப வாழ்வார்கள் என்றால் இந்தியாவே இன்று கிறிஸ்தவ நாடாயிருக்கும். - மகாத்மா காந்தி



சொகுசாக வைக்கக்கூடிய ஒரு மதத்தை நீ விரும்பினால், நிச்சயமாக நான் கிறிஸ்தவத்தை பரிந்துரைக்கமாட்டேன். - சி.எஸ். லூயிஸ்



கற்றுக்கொள்கிற கிறிஸ்தவர்கள் வளர்கிற கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவர்கள் கற்பதை நிறுத்தும்போது, அவர்கள் வளர்வதை நிறுத்துகிறார்கள். - ஜான் வெஸ்லி



உங்கள் கவலையைக் குறித்து தேவனிடம் ஜெபியுங்கள். தேவன் கவலைப்படட்டும். - மார்டின் லூத்தர்



# பழமொழிகள்

தேனை மிகுதியாய் உண்பது நல்லதல்ல (நீதிமொழிகள் 25:27)
அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.

தீவினையை விதைத்தவர்கள், அதையே அறுக்கிறார்கள் (யோபு 4:8)
தீதும் நன்றும் பிறர்தர வரா.

தூரத்திலுள்ள சகோதரனிலும் சமீபத்திலுள்ள அயலானே வாசி (நீதிமொழிகள் 27:10)
தூரத்துத் தண்ணீர் தாகத்துக்கு உதவாது.

செல்வம் என்றைக்கும் நிலையாது (நீதிமொழிகள் 27:24)
கம்மாளன் பணம் கரியும் பொரியுமாய்ப் போய்விட்டது.

சோம்பற்கையால் வேலை செய்கிறவன் ஏழையாவான் (நீதிமொழிகள் 10:4)
சோம்பல் சோறின்மைக்குப் பிதா.

ஞானமுள்ளவன் பயந்து தீமைக்கு விலகுகிறான் (நீதிமொழிகள் 14:16)
துஷ்டனைக் கண்டால் தூர நில்.

ஞானமாய் நடந்து, காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள் (கொலோசெயர் 4:5)
காலம் உயிர் போன்றது.

தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும் (மத்தேயு 7:7)
முந்தின கைக்கே பணியாரம்.

தன் இளம்பிராயத்தில் நுகத்தைச் சுமக்கிறது மனுஷனுக்கு நல்லது (புலம்பல் 3:27)
இளமையில் முயற்சி முதுமையில் காக்கும்.

கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள் (ரோமர் 12:10)
கும்பிடு கொடுத்துக் கும்பிடு வாங்கு.

கால் துரிதமானவன் தப்பி நடக்கிறான் (நீதிமொழிகள் 19:2)
பதறாத காரியம் சிதறாது.

ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள் (கலாத்தியர் 6:2)
பகிர்ந்த வேலை பளுவாயிராது.

# ஜெபக்குறிப்புகள்

- 2021ஆம் ஆண்டு இந்தியாவில் குழந்தைகளுக்கு எதிராக சுமார் 1,49,404 குற்றங்கள் பதிவாகியுள்ளது, இதில் 53,874 (36.4%) வழக்குகள் போக்சோ வழக்குகளாகவும் பதிவாகியுள்ளது.
- இந்தியாவில் சுமார் 17.7 லட்சம் சிறுவர்கள் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று வளர்ச்சித் துறை தெரிவித்துள்ளது.
- நம் தேசத்தில் 6 முதல் 14 வயதுக்குட்பட்ட 3.5 கோடி சிறுவர்கள் பல காரணங்களினால் பள்ளிக்கு செல்வதில்லை.
- இந்தியாவில் நான்கில் மூன்று குழந்தைகள் இரத்தசோகையினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- இந்தியாவிலிருக்கும் 40 கோடி சிறுவர்களின் இரட்சிப்பிற்காகவும், பாதுகாப்பிற்காகவும் ஜெபிப்போம்.
- பெண் குழந்தைகளுக்கு எதிராக நடக்கும் பாலியல் குற்றங்கள் தடுக்கப்பட ஜெபிப்போம்.
- நம் தேசத்தில் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவர், சிறுமிகளுக்காக ஜெபிப்போம்.
- இந்தியாவில் ஆண்டுக்கு சுமார் 45 ஆயிரம் குழந்தைகள் காணாமற் போவதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.
- 54 ஆயிரத்து 723 வழக்குகள் குழந்தை கடத்தல் சம்பவங்களும், 36 ஆயிரத்து 22 வழக்குகள் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வல்லுறவு சம்பவங்களுக்காகவும் பதிவாகியுள்ளன என தேசிய குற்ற ஆவண காப்பகம் புள்ளி விவரம் தருகிறது.
- கடந்த 2016ல் குழந்தைகள் கடத்தல் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான பாலியல் வல்லுறவு என இரண்டிலுமே 14 ஆயிரத்து 611 வழக்குகளுடன் உத்தர பிரதேசம் முதலிடத்தில் உள்ளது.
- 2 மில்லியன் மக்கள் தொகைக்கு மேற்பட்ட சென்னை, கோவையை உள்ளடக்கிய 19 பெருநகரங்களில் குழந்தைகள் மற்றும் சிறுமிகளுக்கு எதிராக கடந்த 2016ஆம் ஆண்டில் மட்டும் மொத்தம் 16 ஆயிரத்து 984 குற்ற சம்பவங்கள் நடந்துள்ளன.
- புகைபிடிக்கும் ஒருவர், ஒருமுறை புகைபிடிக்கும்போது தன்னுடைய வாழ்நாளில் ஐந்து நிமிடத்தை இழக்கிறார்கள் என்கிறது உலக சுகாதார அமைப்பு. இந்திய மக்கள் தொகையில் 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளில், 6 லட்சத்து 25 ஆயிரம் பேரும், 15 வயதுக்கு மேற்பட்டவர்களில் 10 கோடியே 36 லட்சத்து 14 ஆயிரம் பேரும் புகையிலையை தினமும் பயன்படுத்துகின்றனர்.

இதற்காக ஜெபிப்போம்.



பெற்றோர் பகுதி

# பெற்றவர்களே!

பிறந்தேன், வளர்ந்தேன், சாதித்தேன் என்பதைக் கடந்து ‘என் வாழ்வை அருமையாய் அனுபவித்தேன். வேதனையில்லாமல் வாழ்ந்தேன். இன்பத்தையே சாதித்தேன்!’ என்று சொல்லிக்கொள்ளவே எல்லோரும் விரும்புகிறோம். தங்கள் வீட்டுக் குழந்தைகள் இன்பமாய் இருப்பதைப் பார்த்து இருமடங்காய் மகிழும் பெற்றோர், தங்கள் குழந்தைகள் சுதந்திரமாய்ச் செயல்படுவதைப் பாதி அளவுகூட அனுமதிக்கப் பயப்படுகிறார்கள்.

தங்களுக்கு நெருக்கமானவர்களின் இன்பத்திற்கு உற்சாக நீர் பாய்ச்சும் எல்லோரும் அதே நெருக்கமானவர்களின் சுதந்திரக் குருத்தைக் கிள்ளுகிறார்கள். இன்பத்தின் அடுத்த நிலைதான் சுதந்திரம். அறிந்தோ, அறியாமலோ நெருக்கமானவர்களின் இன்பச் சிறகுகளை நீவி விட்டு வளர்த்துவிடும் நாமே. அவர்கள் சுதந்திரமாய்ப் பறக்கத் துணியும்போது அவர்களின் சிறகுகளைப் பிடுங்கி விடுகிறோம்.

பறவைகள் தன் குஞ்சுகளுக்குச் சிறகுகள் முளைத்ததும் கூட்டிலிருந்து கீழே தள்ளி விடுமாம். விழுந்து எழுந்து கற்றுக் கொள்வது தானே வாழ்க்கை. மனிதர்களில் பலர் தங்கள் பிள்ளைகளின் சிறகுகளையே கத்தரிப்பவர்களாக அல்லவா இருக்கிறார்கள்? நம் பிள்ளைகளின் விருப்பு, வெறுப்புகளுக்கு நாம் என்ன மரியாதை தருகிறோம்?

நாம் எப்படி விரும்புகிறோமோ அப்படியே அவர்கள் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். கொடுமையான சர்வாதிகாரிகளைப் போல அவர்களை அடக்கி ஆள்கிறோம். காரணம், ‘பிள்ளைகளை நாம்தான் உண்டாக்கினோம்’ என்று எண்ணும் மடமையே. ‘உங்கள் பிள்ளைகள், உங்கள் பிள்ளைகள் அல்லர்; அவர்கள் உங்கள் வழியாக வந்தவர்கள்’ என்கிறார் கலீல் கிப்ரான். ஆம் பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம் (Gift from God and Gift of God).

ஒவ்வொரு குழந்தையும் தனிப்பட்ட ஆற்றல்களோடு பிறக்கிறது. ஆனால் பெரும்பாலான பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளைத் தங்களின் நகல்களாக இருக்கவே விரும்புகின்றனர். ஒவ்வொரு குழந்தையும் தன் இரண்டரை வயதிலேயே தன் சுயத்தை உணர ஆரம்பித்து விடுகிறது. சுயத்தின் விருப்பமே சுதந்திரம்.

தான் நினைக்கிறபடியே மற்றவர்கள் இருக்க வேண்டும் என்று நினைப்பவன் மூடனாகவும், வன்முறையாளனாகவும் இருக்கிறான். அவன் படைப்பின் இரகசியத்தையும், இறைவனின் மேன்மையையும் அறியாதவனாக இருக்கிறான்.

மனிதனுடைய உன்னதமான உணர்வுகள் மொட்டுகளை போன்றவை. அவற்றை இயல்பாக மலரவிட வேண்டும். வற்புறுத்தக் கூடாது. மற்ற உயிரினங்களுக்கு வழங்கப்படாத ஒன்று மனிதர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்றால், அது சுதந்திரம். அதனால்தான் அவன் வளர முடியும். முன்னேற முடியும்.

சமூகம் என்பது பூங்கா. மனிதன் உண்டாக்கும் பூங்காக்களில் செடி, கொடிகளை அவன் தன் விருப்பம்போல் வளரக் கட்டுப்படுத்துகிறான். காட்டில் மரங்கள் சுதந்திரமாக வளர்கின்றன.

நெருக்கமானவர்களிடம் நீங்கள் திருப்தியை உணர வேண்டுமா? முதன் முதலில் அவர்களின் சுதந்திரத்தை அனுமதியுங்கள். ‘சுதந்திரம் அளிப்பதுதான் சுதந்திரம் பெறுவதின் சூட்சுமம்.’ நீங்கள் எப்படி?


01
MAY
MONDAY
9 AM - 2 PM
என் வாய் உமது துதியினாலும், நாள்தோறும் உமது மகத்துவத்தினாலும் நிறைந்திருப்பதாக.
சங்கீதம் 71:8
ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
தொடர் துதி
ஆராதனை
அபிஷேகம் நிறைந்த ஆராதனை
வல்லமையான ஜெபம்
சத்திய வார்த்தை
Pastor
OSBORNE
JEBADURAI
மதிய உணவு வழங்கப்படும் !
ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு கோடம்பாக்கம், சென்னை 24
90030 67777, 98849 08777

தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள்; தம்மை அண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் கேடகமானவர்.
நீதிமொழிகள் 30:5



ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்

Elim GRC

# வசன எழுப்புதல் நற்செய்தி

## பெருவிழா

**மே 8 - 12 வரை**

**6.00 pm - 8.30 pm**



*Pastor* **JUBLIN JOSEPH**

*Pastor* **OSBORNE JEBADURAI**

**மே 8,9,10,11,12 | திங்கள் முதல் வெள்ளி வரை**

**ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்**

50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு கோடம்பாக்கம், சென்னை 24

**90030 67777, 98849 08777**

SCAN THIS FOR LOCATION